யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

# தவணைப் பரீட்சை, யூன் - 2016
# Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | கர்நாடக சங்கீதம் - II | நேரம் :- 3.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

**பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.**

## பகுதி - I

(1) i) ஜனக ராகத்தின் இலட்சணங்களைத் தருக.

ii) ஜனக ஜன்னிய ராகப் பிரிவுகளில் மூன்றினை உதாரணங்களுடன் விளக்குக.

iii) திவிதீய கனபஞ்சக ராகங்களைக் குறிப்பிடுக.

iv) இராகத்தின் 10 இலட்சணங்களையும் எழுதுக.

(2) i) இசைக் கச்சேரியில் பிரதானமாக வாசிக்கப்படும் தோல் வாத்தியம் யாது?

ii) இவ்வாத்தியம் வாசிப்பதில் பிரபல்யமான இரு வித்துவான்களைக் குறிப்பிடுக.

iii) இவ்வாத்தியத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.

iv) இவ்வாத்தியத்தின் அமைப்பினையும் சுருதி கூட்டும் முறையினையும் விளக்குக.

(3) i) கிருதியை அலங்கரிக்கும் அணிகளின் மூன்று பிரிவுகளும் எவை?

ii) ஸ்வராட்சர அணியினை உதாரணத்துடன் விளக்குக.

iii) தசவித கமகங்களும் எவை?

iv) அவற்றுள் இரண்டினை உதாரங்களுடன் விளக்குக.

## பகுதி - II

(4) i) “கீதவாத்ய வினோத” என்ற விருதினைப் பெற்றவர் யார்?

ii) இவர் இயற்றிய இரண்டு நூல்களைக் குறிப்பிடுக.

iii) இவரது வாழ்க்கை வரலாற்றினைத் தருக.

iv) இவர் இசை உலகிற்கு ஆற்றிய சேவையை விபரிக்குக.

(5) பின்வரும் இராகங்களுள் இரண்டினுக்கு விரிவான இலட்சணம் தருக.

i) பஞ்சசாமரம் என்ற வர்ணமெட்டு அமைந்துள்ள இராகம்

ii) வசந்தா

iii) அஸம்பூர்ணமேள பத்ததியில் கீரணவணி என அழைக்கப்படும் இராகம்

iv) காபி

(6) i) தாளதசப்பிராணங்களை வரிசைக்கிரமமாகத் தருக.

ii) அவற்றுள் மூன்றினை உதாரணங்களுடன் விளக்குக.

(7) சிறுகுறிப்பு எழுதுக.

i) திரிதால்

ii) அனுவாதி

iii) யமகம்

iv) சோடசாங்கம்

v) சங்கீர்ண ராகம்

(8) கர்நாடக இசைக்கும் மேலைத்தேய இசைக்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க.

**அல்லது**

நீர் கண்டுகளித்த வீணைக் கச்சேரி ஒன்றினை விமர்சிக்குக.

The National e-learning Portal for The General Education